வைத்தீஸ்வரன் கோயில், திருவெண்காடு, ஆலங்குடி, கஞ்சனூர், கீழ்பெரும்பள்ளம் மற்றும் திருநாகேஸ்வரம் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளான கழிப்பறை, வாகனம் நிறுத்துமிடம், அணுகு சாலை, ஓய்வுக் கூடம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் முகமையான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆலங்குடி மேம்பாட்டிற்காக ரூபாய் 6.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாகனம் நிறுத்தும் இடம் கட்டப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், நவக்கிரக ஆலயங்களுக்குச் சென்று வழிபடும்வகையில், நவக்கிரகச் சுற்றுலாவை நடத்தி வருகிறது. இந்தச் சுற்றுலா ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு நவக்கிரக ஆலயங்களை வழிபட்ட பிறகு, திங்கட்கிழமை காலை சென்னை வந்தடையும். நவக்கிரக ஆலயங்களின் சிறப்புகளை எடுத்துக் கூறும்வகையில், சிறப்பு மடிப்பேடு, சுற்றுலாத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரம், அவ்வளவுதானா? திருப்தியாகிவிட்டீர்களா?

வினா எண் 100, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

100—

சுற்றுலாத் தலம்

***44734–திரு. கே.ஆர். இராமசாமி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, தேவகோட்டை நகராட்சியில் இளைஞர்களுக்காகப் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2004 ஜூலை 30]

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாடானை தொகுதி, தேவகோட்டை நகராட்சியில், இளைஞர்களுக்கானப் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம், புளியந்துறை இடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. நா. சந்திரமோகன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் உள்ள புதுப்பட்டினம் ஊராட்சிக்கும், புளியந்துறை ஊராட்சிக்கும் இடையில் உள்ள உப்பனாற்றில் போக்குவரத்துப் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.